அங்கே உருவாக்க குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்தத் திட்டத்தை விரைவுப்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மணப்பாறை நகருக்குக் குடிநீர்.

*626---திரு பாப்பா சுந்தரம் :
திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளித்தலை தொகுதி, மணப்பாறை நகருக்கு காவிரியில் இருந்து குடிநீர் கொடுக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயல்படுத்தப் படும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மணப்பாறை நகராட்சி மற்றும் 59 வழியோரக் கிராமங்களுக்கு தொம்பேச்சியார் ஆற்றினை ஆதாரமாகக் கொண்ட ஒரு குடிநீர் திட்டம் செயல்படுத்த ரூ. 548.52 லட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தீட்டப் பட்டது திருத்தி அமைக்கப்பட்ட உலக வங்கி உதவியுடன் செயல் படுத்தப்படும் தமிழ்நாடு குடிநீர் மற்றும் துப்புறவுத் திட்டத்தில் இத்திட்டத்தினை சேர்த்து மத்திய அரசு மற்றும் உலக வங்கியின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது ஒப்புதல் கிடைக்கப் பெற்றவுடன் இத்திட்டத்தினை அமுலாக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு உலக வங்கியிடமிருந்து கடனாக பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார் கள். உலக வங்கி அதற்கு அனுமதி அளித்துள்ளதா? எத்தனை ஆண்டு காலத்திற்குள்ளாக இதை முடிப்பதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இருக்கின்றன என்ற விவரத்தை தெரிவிக்க

முடியுமா? அதோடு மட்டும் அல்லாமல் இன்றைக்கு கூட்டுக் குடிநீர் திட்டம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறோம். இது நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் சேர்ந்து இருக்கின்ற பல்வேறு கிராமங்களையும் சேர்த்து உள்ள ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம். யார் பராமரிப்பது என்ற குறை இருக்கிறது. அதைப் பற்றி அரசு முடிவு எடுத்திருக்கிறதா என்ற விவரத்தை தெரிவிக்க முடியுமா?

9-45 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப்பற்றி ஆய்வதற்காக மத்திய அரசு மற்றும் உலக வங்கியின் ஒப்புதலுக்காக 15-11-1989-ல் அரசிலிருந்து அவர்களுக்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி உலக வங்கியின் ஒப்புதலைத் துரிதமாகப் பெறும் நோக்கத்துடன் தலைமைச் செயலாளரின் தலைமையில் அதிகாரிகள் குழு அமெரிக்கா சென்று பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது. மணப்பாறை உட்பட திருத்தி அமைக்கப்பட்ட உலக வங்கித் திட்டம் முன்பிருந்தபடி, மதுரை, கோவை, சேலம் ஆகிய நகரங்களுக்கு குடிநீர் வழங்குவதுடன் மாற்றியமைக்கப்பட்ட வடிவில், கூடுதலாக பொள்ளாச்சி, மணப்பாறை, சங்கரநயினார்கோயில், புதுக்கோட்டை, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் ஆகிய 6 நகரங்களுக்கும் குடிநீர் வழங்கும். மணப்பாறை, பொள்ளாச்சி ஆகிய நகரங்களுக்கு திட்ட அறிக்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ளது. ஆகவே, உலக வங்கியின் ஒப்புதல் பெற்ற பிறகு, இந்தப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடிநீர் திட்டத்திற்கு கிட்டத்தட்ட குளித்தலையிலிருந்து மணப்பாறை வர வேண்டுமென்றால் 26 மைலுக்கு மேல் ஆகிறது. நடுவிலே இப்போது தோகைமலை என்கின்ற ஒரு பேரூராட்சியைத் தனியாகப் பிரித்து இருக்கிறார்கள். இதற்காக ஏற்கெனவே 14 வருடங்களுக்கு முன்பாக கலைஞர் ஆட்சியிலே கிராஷ் புரோகிராம் என்று மத்திய சர்க்கார் ஒதுக்கியிருந்தது. அந்தத் திட்டத்தில் இதுவும் சேர்ந்து இருந்தது. அந்தத் திட்டம் என்ன ஆயிற்று என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து தனியாக வினா எழுப்புமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.